விலை
20/-

"ஆய கலைகளில் ஆற்றல் பெருக
கண்மணி கரம் தருவாள்!"



# கண்மணி



கண் 6 ஆனி 2009 மணி: 10





## உள்ளே .....!


X+ உங்களின் எதிர்காலம் வளமாக.... மா. சின்னத்தம்பி

X+ குழந்தைக் கவிதை சுவைத்தலும் இசைத்தலும்-கல்வயல்- வே.குமாரசாமி

X+ தோல்வியை எண்ணி கலங்காதே- குப்பிழானூர் ம. மயூரி

X+ மீனவ புரத்து மீனரசி- தாட்சாயணி

X+ கல்வியின் நோக்கம் எதுவாக இருக்கும்?- பா.பாலமுரளி

X+ தரம் 5 புலமைப் பரிசில் தகவல் மணிகள்

X+ மாணவர் போட்டிகள்

X+ படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா?

X+ இன்னும் பற்பல அம்சங்களுடன்........



ஆசிரியர்
இரா. ஜெயக்குமார்
(B.A.Dip in Education)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

ஆலோசகர் குழு
பா. தனபாலன்,
(M; Phil in Education)
நிபுணத்துவ ஆலோசகர்,
கல்வி வழிகாட்டல் ஆலோசனை
நிலையம், யாழ்ப்பாணம்.

புலவர் ம.பார்வதிநாதசிவம்,

சிவத்தமிழ் வித்தகர்
சிவமகாலிங்கம்
(B.A,Dip in Edu.SLEAS )

கவிமணி க.ஆனந்தராஜா

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி


## உங்களின் எதிர் காலம் வளமாக.....



மாணவர்களே! உங்களது பள்ளிப்பருவம் மிக இனிமையானது. அபூர்வமானது. மிக மகிழ்ச்சிகரமானது. உங்கள் வயதிலுள்ள பலருடன் பழகுகின்ற ஒரு வாய்ப்பை அது வழங்குகின்றது. உங்கள் குடும்பத்தவருக்கு வெளியே நீங்கள் சந்திக்கக் கூடிய மற்றொரு சற்றுப் பெரிய குடும்பமாக உங்கள் வகுப்பறையைப் பாருங்கள். அந்த வகுப்பறை உள்ள பாடசாலையை இன்னும் சற்று பெரிய சமூகமாக, பெரிய குடும்பமாக பாருங்கள்.

எந்தவொரு வருமானமும் நீங்கள் பெறுவதில்லை, ஆனால் வீட்டிலும், பள்ளியிலும் உங்களுக்காக, ஒவ்வொரு நாளும் நிறைய செலவு உண்டு. உங்கள் பெற்றோர் அந்தச் செலவை செய்கிறார்கள். அதற்காக தினமும் உழைக்கிறார்கள். உங்கள் சந்தோசத்திற்காக பாடுபடுகிறார்கள். உங்கள் முன்னேற்றத்திற்காக ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்கிறார்கள். உங்கள் வாழ்வினை முன்னேற்ற வேண்டும் என்பதற்காகவே பல வழிகளில் உங்கள் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியம் – சாதனை – வெற்றி

தந்தையரை தங்களை வருத்தி கொள்கின்றனர். நிறையவே தியாகம் செய்கிறார்கள். அவர்களுக்கு எந்த சுயநலமும் இல்லை. வாழ்வில் உங்களை நல்ல மனிதராக்க வேண்டும். கல்வி மானாக்கவேண்டும். அந்தஸ்தும் மதிப்பும் உள்ள தொழிலை நீங்கள் பெற வேண்டும். தங்களை விடவும் நீங்கள் கௌரவமாகவும், மரியாதையுடனும், பெருமையுடனும் வாழ வேணடும் என்று எண்ணி உங்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். சில சமயங்களில் நீங்கள் செய்யக்கூடிய வேலைகளைக் கூட செய்ய விடாமல் தடுத்து தாமே அதையும் செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் தம் உடல் வருத்தம் பார்ப்பதில்லை. ஓய்வு பற்றி நினைப்பதில்லை. உங்கள் மீது போட்டியோ பொறாமையோ இல்லை. அவர்களிடம் இருப்பதெல்லாம் எங்கள் மீதான அதிக அன்பு தான். அவர்களது ஆசை எல்லாம் உங்கள் முன்னேற்றம் தான். இந்த எண்ணத்தோடு தான் தமது வீட்டுக்கு வெளியே நல்லபாடசாலையில் கற்பதற்காக உங்களை அனுப்புகின்றார்கள். அப்படியானால், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? உங்கள் கடமை என்ன? அது பற்றிய உங்கள் உணர்வு தான் என்ன? இதில் உங்களுக்குப் பொறுப்பு இருப்பதை உணர்கிறீர்களா? மெதுவாக சிந்தித்துப் பாருங்கள்!

வாழ்வில் முன்னேறியவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அழகான உடையோடு, மரியாதையான தொழில்களில் சேர்ந்து, வசதியாக வாழ்பவர்களை பார்த்திருப்பீர்கள். அவர்களது முன்னேற்றத்தை ஊக்குவித்த நிலைமைகள் எவை? எப்படி அவர்கள் முன்னேறினார்கள்? சிறிது யோசித்துப் பாருங்கள்!

அவர்கள் வெற்றிக்கு இது தான் காரணம் பல பிள்ளைகள் பள்ளி செல்ல முடியாது வீதியில் அலைகிறார்கள். சிலர் சிறிய தொழில் நிறுவனங்களில் சிறுவர்களாகவே பணி செய்கிறார்கள். பள்ளியில் படிக்கும் நீங்கள் அதில் அகப்படாது தப்பி விட்டீர்கள். இதற்கு உதவியவர்கள் உங்கள் பெற்றோர்கள் தானே. நீங்கள் செய்ய வேண்டியது இவை மாத்திரந்தான்.

- **பள்ளிக்கு ஒழுங்காகவாருங்கள். வகுப்பில் பாடங்களை கவனத்தோடு படியுங்கள்.**
- **ஆசிரியரிடமிருந்து பெறக்கூடிய எல்லாவற்றையும் பெறுங்கள்.**
- **ஒழுங்குடனும் ஒழுக்கத்துடனும் பள்ளியில் நடந்து கொள்ளுங்கள்.**
- **நண்பர்களுடன் இனிமையாகப் பழகுங்கள்.**
- **மென்மையாக பேசவும், பழகவும் கற்றுக் கொள்ளுங்கள்.**
- **ஒவ்வொரு சோதனைகளிலும் உங்கள் பெற்றோருக்காக, அவர்களது தியாகத்துக்காக, அதிக புள்ளிகள் பெற வேண்டுமென்று திடசங்கற்பம் கொள்ளுங்கள். உண்மையாகவே பாடுபட்டு படியுங்கள்.**
- **பெறக்கூடிய உச்சப்புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

பாடசாலைக் கல்வியினை கவனமாக மேற்கொண்டால் 50வருடங்கள் சந்தோசமாக வாழலாம். பாதுகாப்புடனும் மதிப்புடனும் வாழலாம். மாறாக பள்ளிப் பருவத்தில் படிக்காமல் விட்டவர்கள், பொறுப்பில்லாமல் நடந்தவர்கள், தமது வாழ் நாள் முழுவதுமே தொழிலாளியாக வாழ்கின்றனர். உடல்களைக்க வேலை செய்கின்றனர். மற்றோரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து வேலை செய்கின்றனர். விரைவில் நோயாளியாகி விடுகின்றனர். இது எங்களுக்கு விருப்பம் தானா? இல்லையே! இதை தவிர்க்க முடியும் தானே. ஒரேயொரு கடமை என்னவெனில் பள்ளிப்பருவத்தில் ஒழுங்காக இருந்து சிறப்பாக கல்வி கற்பது தான். இந்த ஒழுங்கான கல்வியும், அதனால் வரும் முன்னேற்றமும் உங்களுக்கு மகிழ்ச்சியினை வாழ்வில் ஏற்படுத்தும். உங்கள் பெற்றோருக்கு பெருமையைத் தரும். உங்கள் சகோதரிக்கு உதவி செய்யக்கூடிய வல்லமை உடையவராக நீங்கள் வளர்ந்து விடுவீர்கள். உங்கள் கிராமத்தில், உங்கள் சமூகத்தில், முன் மாதிரியான பெரியமனிதாராக, நல்ல மனிதராக, பாராட்டக்கூடியவராக நீங்கள் முன்னேறி விடுவீர்கள்.

இது தான் உங்கள் பெற்றோரின் கனவும், ஆசையும், அவர்கள் நினைப்பெல்லாம் உங்களைச் சுற்றித்தான். இதை விளங்கிக் கொண்டு பள்ளிப் பருவத்தில் நல்ல மாணவனாக, மாணவியாக செயற்படுங்கள். அதிஷ்டதேவதை உங்கள் வீட்டுக்கதவை தட்டிக் கொண்டே இருப்பாள்.

மா.- சின்னத்தம்பி
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைக் கவிதை
## சுவைத்தலும் இசைத்தலும்

குழந்தைக் கவிதை – சுவைத்தலும் இசைத்தலும் என்ற இப்பொருள் பற்றிக் கூறமுற்படும் போது குழந்தைக் கவிதை என்றால் என்ன என்ற வினாவிற்கு விடை தேடவேண்டிய தேவை அவசியமானதொன்றாகின்றது. குழந்தைக்கான கவிதையில் வரும் சொற்கள், அவை தரும் எண்ணக்கருக்கள், குழந்தைகளின் கிரகிப்புத் திறனுக்கு ஏற்ப நெகிழக்கூடிய சந்தக்கட்டு, பாடலடிகள், காட்சிப் படங்களாக படிமங்களாக குழந்தை மனதிலே பதியக்கூடியதாக இருத்தல்அதாவது தூலமான காட்சிப் பொருட்கள் முதலிய இன்னோரன்ன பல பண்புநலன்களை அது கொண்டிருக்க வேண்டும்.

எளிமையும் இனிமையும் இலளிதமும் இலகுவில் மனங்கொள்ளக்கூடிய அன்றாடம் சூழலில் பயிலும் சொற்களும் அதே வேளை அவை குழந்தைகளின் கிரகிப்புக்கு மிக எளிதில் வசமாகக் கூடிய இலகுவான எண்ணக்கருக்களைச் சுட்டி நிற்பனவாகவும் குழந்தைப் பாடல்கள் ஆக்கப்பட்டிருத்தல் இன்றியமையாதது. அதே வேளை குறுகிய சிறிய அடிகளைக் கொண்டவையாய் வெறுஞ்சொற்சுமையாக இல்லாது இருத்தல் நன்று.

இனி பாடலைத் தனித் தனிச் சொற்களாகப் பிரித்து, தெளிவாக உச்சரிக்க, அதனைத் தொடர்ந்து குழந்தைகளும் அச் சொற்களை அவ்வாறே சொல்ல வேண்டும். இவ்விதம் சொற்கள் உச்சரிக்கப்படும் போது பொருட்பலிதம் - விளக்கம் தெளிவாக்கப்படுகின்றது. அதன் பின் பாடல் முழுவதையும் இதனோடு பாட, குழந்தைகளும் தொடர்ந்து பொருள் விளங்கிப் பாடுவார்கள்.

குழந்தைக்கவிதைகள் இலகு மொழிச் சொற்சித்திரமாக இருக்குமானால் அவை குழந்தை வாயிலே இயல்பாகவே வந்து குந்திக் கொள்வதோடு, உடல் மொழி ஒன்றையும் ஒருசேர உருவாக்கி அபிநயிக்க வைப்பதனையும் கண் முன்னே காணக்கூடியதாகவும், புதிய தோர் இசையும் அசைவும் கலந்த கலைக்கோலக் காட்சியை அக் குழந்தைக் கவிதை முன்நிறுத்தியிருப்பதையும் நன்கு உணர முடிகின்றது.

குழந்தையின் கிரகிப்புத் திறனுக்குத் தகுந்த, நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்த, நாடகத் தன்மை பொருந்திய, பல்சுவைப் பண்புகெழுமிய, அவர்களது கட்புல செவிப்புலன்களுக்கு மிக எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய சொற்சித்திரங்களாகவும் கவிதை அமைந்திருத்தல் அவசியம்.

தாள லயத்துடன் பாடக்கூடிய பாடல்களில் சந்தக்கலப்பு, ஓசை ஒழுங்கு, பொருள் தெளிவு ஆதியன நுட்பமாக இசைந்திருக்குமாறு எழுதப்பெற்றிருக்க வேண்டும். அத்தகைய பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடி ஆடிப் பழகுவோம், பழகுவோம்.

கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி

## நாம் வாழப்பிறந்தவர்கள் கவிதை

*நலிந்து போகின்ற இந்த*
*நிஜமற்ற சமுதாயத்தினிலே,*
*நசிந்து போகும் இந்த*
*நரக வாழ்வு தனிலே,*
*நாகரிக மோகத்திலே,*
*தூங்குகிறது இந்த உலகம்.*
*எங்கோ ஓர் மூலைதனில்*
*நம் எழிலிடம் அழிந்து*
*நிர்மூலமாகின்றது.*

***இன்றைய இளம் சந்ததியின்***
***இழிவான அழிவை எண்ணி***
***ஓங்கி உயர்ந்த பனையும்***
***ஒடுங்கி இருக்கின்ற உள்ளமும்***
***என்றென்றும் ஒன்றாயிருந்து***
***ஓலமிடுகின்றது***
***இவர்கள் வாழப் பிறந்தவர்கள் என!!***

செல்வி ம. கௌசிகா
7A
யா/ மகாஜனக்கல்லூரி



## பொது அறிவு

1. நண்டிற்கு பற்கள் எங்கே உள்ளன?
   அதன் வயிற்றில்
2. மலைப்பாம்பு குட்டி ஈனுமா?
   ஈனாது, முட்டை இடும்.
3. காக்கைகளில் கூடு கட்டுவது ஆணா? பெண்ணா? பெண்
4. நாய்க்கு எத்தனை பற்கள்? 40
5. முதலை ஏன் கடலில் வசிப்பதில்லை?
   உப்பு நீராயிருப்பதால்

க. ரமனுஜா
தரம் 10
யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தகல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோல்வியை எண்ணி கலங்காதே!

வாழ்க்கை போராட்டம் நிறைந்தது. இங்கு இன்ப துன்பம் தவிர்க்க முடியாத ஒன்றாக இருப்பதைப் போலவே, வெற்றி தோல்வியும் தவிர்க்க முடியாதவை. விஞ்ஞானம் எவ்வளவு தான் வளர்ந்தாலும், நாகரிகம் மாறினாலும், எத்தகைய அறிவாளி, அனுபவசாலியாக இருந்தாலும், வெற்றியின் போது ஆர்ப்பரிக்கும் நாம் தோல்வியை கண்டு துவண்டு போகின்றோம். "விழுவது வெட்கமல்ல, வீழ்ந்து கிடப்பதே வெட்கமானது" என்பதை மனதில் நிறுத்த மறுக்கின்றோம். ஒரு மனிதனை சூழ்நிலை உருவாக்குவதில்லை. அவனது மனம் தான் உருவாக்குகின்றது. மனதில் உறுதியான நம்பிக்கையும், தூய்மை, பொறுமை, விடா முயற்சியும் இருந்தால் எம்மால் மீண்டும் வெற்றி பெற முடியும். தன்னம்பிக்கை இல்லாத எவனுமே நினைத்ததை சாதிக்க முடியாது. நம்பிக்கையுடன் முயன்றால் வெற்றி நிச்சயமானது. வீரமும், துணிவுமே வாழ்க்கையில் வெற்றியை தரும். எம்மில் பலர் ஒரு விடயத்தில் தோற்றுவிட்டோம் என்பதற்காக வாழ்க்கையில் தோற்றுவிட்டோமே என எண்ணிக் கொள்கின்றோம்.

**"நாம் விழுவது மறுபடியும் எழுவதற்கே"**

என்பதை மறந்து விடுகின்றோம். கலக்கம் ஒவ்வொரு வீட்டிலும் உண்டு. கவலை ஒவ்வொரு நெஞ்சிலும் உண்டு. எதற்காக நாம் மனமுடைந்து போகின்றோம்? வாழ்க்கையில் வெற்றி தோல்வியை சந்திக்காத மனிதன் எவர்? இரவு பகல் மாறிமாறி வருவது போல இவையும் ஏற்படுகின்றன. எல்லா சந்தர்ப்பங்களிலுமே வென்றவர்களும் கிடையாது. எல்லா சந்தர்ப்பத்திலும் தோற்றவர்களும் கிடையாது. ஒவ்வொருவரது வெற்றிக்குப் பின்னாலும் தோல்விகள் பல புதைந்து கிடக்கின்றன. எந்த மனிதன் நெஞ்சுக்குள் காயமில்லை? நம் வாழ்வில் அவமானம், படுதோல்வி எல்லாமே தவிர்க்க முடியாதவை.

பரீட்சை, விளையாட்டு, காதல், தொழில் எனும் பல இடங்களிலும் தோல்வி ஏற்படுகின்றது. மாணவர்கள் பரீட்சையில் தோற்றுவிட்டால் தமது எதிர்காலத்தை தொலைத்தது போல் பாவனை செய்கின்றனர். விளையாட்டில் தோற்றால் வெட்கப்படுகின்றனர். காதலில் தோற்றால் தற்கொலை செய்கின்றார்கள். தொழிலில் தோற்றால் அவமானம் என கருதுகின்றனர். இத்துடன் எமது வாழ்க்கை முடிந்து விட்டதா? மீண்டும் எம்மால் வெற்றி பெற முடியாதா? எதற்காக நாம் மூலையில் முடங்கிக் கிடக்க வேண்டும்? எமது இலட்சியம் நிறைவேற வேண்டுமானால்... எமது வாழ்வு அர்த்தமுடையதாக இருக்க வேண்டுமானால்... எத்தனை தோல்விகள் வந்தாலும், எவ்வளவு அவமானம் வந்தாலும் நாம் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். நாம் வாழ்வது பெரிதல்ல. வாழ்வில் பலவற்றையும் சாதிக்க வேண்டும். அதற்காக முயற்சிக்க வேண்டும். எம்மால் நிச்சயமாக நினைத்ததில் வெற்றி பெற முடியும்.

**"தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கிறது"**

எமது எண்ணங்களை நாம் மாற்ற வேண்டும். புயல் தாக்கும் என்று பயந்தால் மீனவன் கடலுக்கு செல்ல முடியாது. நிஷா புயல் அழித்து விட்டதே என்பதற்காக விவசாயி பயிரிடாமல் இருக்கிறானா? தேர்தலில் ஒரு தடவை? தோற்றுவிட்டதற்காக வேட்பாளர்கள் போட்டியிடாமலா இருக்கிறார்கள்? விழுந்துவிடுவோமே என்று அஞ்சினால் விமானத்தில் பறக்க முடியுமா? கல்வியில் தோற்றுவிட்டோமே என கலங்கினால் எமது எதிர்காலம் என்னவாகும்? எத்தனையோ தோல்விகள் தான் விஞ்ஞானம் விண்வெளி வரை வளர வழிகோலியது. எமது வாழ்க்கைப் பயணத்தில் ஒன்றை இழந்தால் தான் இன்னொன்றை பெற முடியும்.

**"நிகழ்கால தோல்விகளே எதிர்கால வெற்றிகள்"**

என்பதை மனதில் கொண்டு நம்பிக்கையுடன் முயற்சித்தால் வெற்றி நிச்சயம்.

**ம.மயூரி**
**3ம் வருடம்**
**யாழ்பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீனவபுரத்து மீனரசி



## 1. தங்கக்கட்டிகள் மறைவு

புலிமதுரை என்பது ஒரு நாட்டின் பெயர். அந்நாட்டு மன்னன் புலிச்சாகரன். புலிச்சாகரனின் பட்டத்துராணி ராஜவல்லி. இவர்களின் ஒரே புத்திரி தான் மேனகை. இளவரசி மேனகையைக் கண்ணின் மணி போலக் கருத்துடன் பேணி வளர்த்து வந்தனர் பெற்றோர்.

மேனகைக்கு அவள் பாட்டனார் ஏழு தங்கக் கட்டிகளைக் கொடுத்து வைத்திருந்தார். அவள் எப்பொழுதும் அந்த ஏழு தங்கக் கட்டிகளையும் பார்த்து விட்டே படுக்கைக்குச் செல்வாள். அவற்றைப் பார்க்கும் போது அவளுக்கு இனந்தெரியாத ஆனந்தம் பொங்கியெழும். அந்த ஏழு தங்கக் கட்டிகளிலும் ஒவ்வொரு அடையாளம் பொறிக்கப்பட்டிருந்து.

*முதலாவது தங்கக்கட்டியிலே மேகமண்டலத்திலே ஒரு தங்கக்கல்லறை.*
*இரண்டாவதில் ஒரு மீனவப்பெண் கரங்களைக் குவித்து வணக்கம் செய்யும் காட்சி.*
*மூன்றாவதில் தங்கக் குகையும் கொம்பு அரக்கனும்*
*நான்காவதில் விஷஜந்துகள் நிறைந்த வெற்றுநிலம்*
*ஐந்தாவதில் இளவரசக் களை கூடிய ஒரு பச்சிளம் பாலகனை ஒரு அரக்கி கடலில் தள்ளும் காட்சி.*
*ஆறாவதில் பளிங்குடன் கூடிய முத்துமணி மண்டபத்திலே ஓர் அழகிய பெண்ணரசி.*
*ஏழாவதிலே வானிலிருந்து பூக்கள் சிந்துகின்றன.*

இத்தகைய அழகிய தங்கக் கட்டிகள் திடீரென்று ஒரு நாள் காணாமல் போயின. இளவரசியின் தலையணையின் கீழேயே பள்ளிகொள்ளும் அந்தத் தங்கக்கட்டிகள் எப்படி மாயமாய் மறைந்தன? இது யாவருக்கும் அதிசயமாகவே இருந்தது. ஆனால் அரசனுக்கு மட்டும் வேதனை அதிகரித்தது. ஏனெனில் தன் பாட்டனாரின் அன்பளிப்பு தன்னை விட்டுப் பிரிந்ததனால் மனநோய்க்கே ஆளாகி விட்டாள் மேனகை.

இது இவ்வாறிருக்க புலிமதுரையிலே நந்தவனம் என்றோர் ஊர் உண்டு. அவ்வூரிலே வீரவன் என்றோர் இளைஞன் இருந்தான். அவன் ஓர் அநாதை. அவனை ஓர் ஏழை விவசாயி வளர்த்து வந்தான். வீரவன் நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டவன். ஒரு நாள் வீரவன் வயலிலே களை பிடுங்கிக் கொண்டிருந்தான். அப்போது பறை அறிவிப்பவன் அவ்வழியே வந்தான்.

"இத்தால் அனைவரும் அறிந்து கொள்வது என்னவெனில் எங்கள் நாட்டினை ஒற்றுமையுடனும், வலிமையுடனும் நெறிப்படுத்திவரும் நமது மன்னர் புலிச்சாகரனாரின் ஒரே செல்வப் புதல்வி இளவரசி மேனகையின் ஏழு தங்கக்கட்டிகளும் மாயமாய் மறைந்து விட்டன. ஆதலால் அவற்றைக் கண்டெடுத்துக் கொடுப்போருக்கு பாதி நாடு அளிக்கப்படும்" என அரசர் அறிவித்திருக்கிறார்.

இவ்வாறு முழங்கியது முரசு. இதனைக் கேட்ட வீரவன் சிறிது சிந்தித்து விட்டு தங்கக் கட்டிகளைத் தான் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டான். பின்னர் தன் குடிசை நோக்கிச் சென்றான். அந்த ஏழை விவசாயியிடம் "ஐயனே நான் எந்தக் குலத்தில், எப்படிப்பிறந்தேனோ எனக்குத் தெரியாது. ஆனால் தாங்கள் என்னிடம் வேற்றுமை பாராட்டாது தங்கள் சொந்தமகன் போல என்னைப் பராமரித்தீர்கள். அதற்கு நான் என்றும் நன்றிக் கடன் உடையேன். இளவரசி மேனகையின் ஏழு தங்கக்கட்டிகளையும் நான் தேடிப் போகிறேன். அம் முயற்சியில் நான் தோல்வியடைகிறேனோ? அல்லது வெற்றி பெறுகின்றேனோ? தெரியாது. ஆனால் நான் நிச்சயம் உங்களை மறக்க மாட்டேன். என் உயிர் போகும் வரை நான் இம் முயற்சியிலிருந்து பின் வாங்கமாட்டேன். நான் இதில் ஈடுபடுவது அரசாட்சி எனக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவல்ல. நான் வெற்றி பெற்றால் அரசரிடம் கேட்கப்போவது ஒன்றிரண்டு தங்கக்காசுகள் மட்டுமே. அவற்றைக் கொண்டு வந்து தங்கள் காலடியில் சமர்ப்பித்துவிட்டு உங்களுக்கு என்றும் உற்றதுணையாய் இருப்பேன். எனக்குத் தோல்வி கிடைக்க நேரிடும் பட்சத்தில், என்னை மரணம் எதிர்கொள்ளுமானால், அதனை மகிழ்வுடன் எதிர்கொள்வேன். என் இறுதிமூச்சு உங்கள் பெயரையே உச்சரிக்கும்!... போய் வருகிறேன் ஐயா. விடை தாருங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான் வீரவன். விழிகளில் வாழ்வின் உணர்ச்சிக்கட்டமாகிய கண்ணீரைத் தேக்கியபடி... அதற்கு விவசாயி, "பதினெட்டு வருடங்களுக்கு முன்பு கடற்கரை ஓரம் ஒரு கழுகு பறந்து வந்தது. அதன் கால்களுக்குள் ஒரு சிறு குழந்தை. அந்தக்குழந்தை தான் நீ. வானிலிருந்து பறந்து வந்து கழுகு கடற்கரையோரம் இருந்த ஒரு பாறையிலே உன்னைக் கிடத்தியது. மயக்கம் தெளிந்த நீ வீறிட்டுக் கத்தத் தொடங்கினாய். அதனை எதிர்பாராத கழுகு பயந்து வீரென்று வானிலே பறந்து போய் விட்டது. அப்பொழுது இந்தக் தங்கச் சங்கிலி உன் கழுத்திற் கிடந்தது. அதை நான் இதுகாலவரை பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன். இப்பொழுது நீ புறப்படப் போவதனால் இதனை உன்னிடம் நான் கொடுக்கிறேன். பத்திரமாகப் போய் வா ....." என்று வாழ்த்தினான்.

அப்பொழுது வீரவன், "இன்றே நான் அரசரிடம் போய், பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்று கூறினான்.

(தொடரும்)

தாட்சாயணி

பின்வரும் நாடுகளின் ஜனாதிபதிகளின் பெயர்களைத் தருக.



| | | |
|---|---|---|
| 1. | இரசியா | டிமிட்ரி மெட்வதேவ் |
| 2. | இஸ்ரேல் | சிமொன் பெரெஸ் |
| 3. | தாய்வான் | மாஜிங்ஜியோ |
| 4. | பிரான்சு | நிகொலஸ் சார்க் கோஸி |
| 5. | ஜெர்மனி | அஞ்ஜெலா மெர் கெல் |
| 6. | சீனா | ஹூஜிந்தாவோ |
| 7. | ஆர்ஜன்டினா | கிரிஸ்னா பெர்ணாண்டஸ் (பெண் ஜனாதிபதி) |
| 8. | பிலிப்பீன்ஸ் | குளோரியோ மகா பகால் அர்ரோயோ |
| 9. | துருக்கி | அப்துல்லா கல் |
| 10. | ஆப்கானிஸ்தான் | ஹமீத்கர்ஸாயி |
| 11. | கென்யா | வாய்கிபேகியே |
| 12. | பலஸ்தீனம் | ம.்.மூட்அப்பாஸ் |
| 13. | நேபாளம் | ராம்பரன்யாதவ் |
| 14. | ஈரான் | ம.்.மூட்அஹமத் |
| 15. | இந்தியா | பிரதீபாபட்டேல் (பெண் ஜனாதிபதி) |

செ.சுஜீந்
தரம் 11
யா/ நடேஸ்வரக்கல்லூரி

## மனித வாழ்க்கை என்பது என்ன?



அது வெறும் உண்பதும், பருகுவதும், தூங்குவதும், இறுதியில் மரணமடைவதும் தானா? மனிதன் பிறக்கும் போதே மிகவும் தூய்மையாகவும், புனிதமாகவும் இருந்தான். வயது ஏற, ஏற அவன் தூய்மையினை இழக்கிறான். நாம் எமது தூய்மைத் தன்மையை எப்போதும் பேணவேண்டும்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவைப்பாட்டி கூறியுள்ளார். இவ்வரிய மனிதப் பிறவியை எடுத்த நாம் ஆத்ம சாட்சாத்காரம் பெறவே முயல வேண்டும். உலகியல் நாட்டங்களில் நம் வாழ்வை வீணடித்தலாகாது. தன்னை அறிந்தவனே உண்மையில் விடுதலை பெற்றவனாகின்றான். இவ்வுடல் அற்ப ஆயுளைக் கொண்டது. மனமானது பித்துப்பிடித்த குரங்கு என்ற உண்மையினை உணர்ந்தால் தன்னுள் இருக்கும் ஆத்மாவின் உள்ளறிவை வளர்த்துக்கொள்வான்.

செ.சிறீக்குமார்
உரும்பிராய் கிழக்கு



## கலை

கலை என்ற பதத்தை ஓர் வாக்கியத்தில் விளக்கிவிட முடியாது. அது பல்வேறு அறிஞர்களால் பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளது. கலை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். **R.G. Colling wood** என்பவர் கலை பற்றி விளக்குமிடத்து கலைஞனானவன் உணர்ச்சி பூர்வமாக மனநிலைகளினால் தூண்டப்படுகின்றான் என்றும், அத்தகைய நிலையை வெளிப்படுத்துவதற்கு ஒரு ஊடகத்தைக் கண்டு பிடிக்கும் வரைதான் தூண்டப்படும் உணர்வு நிலையை, அதன் இயல்பை, அதன் மூலத்தை அறிந்துகொள்வதில்லை என்றும், கலைஞனது உணர்ச்சிகள் ஒரு வடிவத்தைப் பெறும் போது கலை என்ற பெயரைப் பெறுகின்றன" என்றும் கூறுகின்றார். ஸ்ரீ அரவிந்தர் "அழகைக் கண்டுபிடித்தலும், அதனை வெளிப்படுத்தலும் கலை" என்கிறார். "தான் பெறுகின்ற அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலை" என்று "எரிக் நியூட்டன் "**(Eric Newton)** என்பவரும், இறையுணர்வு, ஞானத்தின் அனுபவங்கள் தான் கலை" என Dr. ஆனந்தகுமாரசுவாமி அவர்களும் கூறுகின்றார்கள். இவ்வாறு அறிஞர்கள் கலை என்றால் என்ன? என்பதற்கு பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றார்கள். ஆனால் **Nelson Good man** என்பவர் கலை என்றால் என்ன? என்ற வினாவுக்கு ஒரு படைப்பு அல்லது ஆக்கம் எப்போதும் கலையாகிறது என்ற கருத்தை முன்வைக்கின்றார். இக் கருத்தே பொருத்தமுடையதாகத் தெரிகின்றது.

(தொடரும்)

திருமதி. வலன்ரீனா இளங்கோவன்
B.A (Hons) Dip. in. Edu ஆசிரியை
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் நோக்கம் எதுவாக இருக்கும்?

நூற்றாண்டுக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்த ஆலமரம் ஒன்று பல கிளைகளைக் கொண்டிருக்கும். ஆனாலும் அதனுடைய உயிர்வாழ்வு அதன் ஆணிவேரிலேயே தங்கியிருக்கும். கல்வி என்கின்ற ஆலமரமும் விஞ்ஞானம், கணனி, புவியியல், வரலாறு எனப் பல கிளைகளைக் கொண்டு வளர்ந்துள்ளது. ஆனாலும் கல்வி எனும் ஆலமரத்தின் உயிர் மனித ஒழுக்கத்திலேயே தங்கியுள்ளது. அதனால் தான் திருவள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்றார். ஒழுக்கத்தைத் தராத கல்வியால் குடும்பத்திற்கோ, சமூகத்திற்கோ, நாட்டிற்கோ பயனில்லை.

ஒழுக்கத்தைக் கற்பிக்கும் நூல்களே உயர்ந்து நிற்கின்றன. சங்க இலக்கியங்கள் என்றால் என்ன பாரத, இராமாயண, இதிகாசங்கள் என்றால் என்ன அனைத்தும் "ஒழுக்கமே கல்வி" என்கின்ற ஆலமரத்தின் ஆணி வேர் என்று அடித்துக் கூறுகின்றன. நூல்கள் கூறும் அறநெறியில் வாழும் ஒழுக்க வாழ்வை "வையத்து வாழ்வாங்கு வாழ்தல்" என்கிறார் வள்ளுவர். எனவே கல்வி உலகு வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலையே தனது உயிராகக் கொள்ள வேண்டும். இவற்றை மேலும் வளர்க்க என்றும் உழைத்தல் வேண்டும்.

ஒழுக்கத்தை உயிராகக் கொள்ளும் கல்வி உலகு தனக்கென வாழ்ந்தால் மட்டும் போதுமா? பிறருக்கென வாழவும் வேண்டும் என்கிறது புறநானூறு.

பாடசாலைகளில் அமைந்துள்ள சாரணர் இயக்கங்களும் பிறர்க்கென முயலும் பண்பை உயர்ந்த பண்பாக வளர்க்கின்றன. இந்தப்பண்பு சாரணர் இயக்கங்களுக்கு மாத்திரமன்றி உலகின் பல பிரிவினர்க்கும் சொந்மாக வேண்டும்.

சங்க காலப்புலவர்கள், பலர் அரசர்கள் இருந்த போதும் சிலரையே போற்றிப் புகழ்ந்து பாடினர். கபிலர் என்ற புலவர் பாரி என்ற வள்ளலைப் பெருந்தொகையான பாடல்களால் பாடினார். அதற்குக்காரணம் பாரி ஒழுக்கத்தில் வள்ளுவர் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தான். பிறர்க்குப் பயன்படுவதில் ஊரிடை உள்ள ஊருணியாகவும், ஊர் நடுவே பழுத்த பழமரமாகவும், தப்பாது பயன்தரும் மருந்துச் செடியாகவும் திகழ்ந்தான்.

பிறந்தோர் அனைவரும் இலட்சிய வாழ்விற்கு முயற்சி செய்ய வேண்டியது கடமையாகும். அதிலும் கல்வி உலகம் ஏனையோர்க்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகவுள்ளது. எனவே, இன்றைய மாணவர் உலகம் ஒழுக்கம், பிறர்க்கு உதவும் பண்பு, அன்புள்ளம் இவற்றை மேலும் வளர்க்க என்றும் உழைத்தல் வேண்டும்.

*பா. பாலமுரளி (ஆசிரியர்)*
*யா/ மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.*

## Oliver Wendell Holmes (1804 - 1994)



Oliver Wendell Holmes (1809 – 1894) was born at Cambridge Massachusetts, the seal of Harvard Univerdity and the home of Long – fellow. He practised successfully as a doctor of medicine and lectured as a professor of anatomy at Harvard, but beame far more famous as a poet and essayist. He first attained fame by "The Autocrat of the Break fast Table" 1858 a series of playfully wise essays intermingled with much delightful verse. This book was followed by "The professor at the "Break fast Table" and "The poet at the Break fast table" He also published a novel and several volumes of verse. "No man in England, said Thackeray in 1858, can write with his charming mixture of wit, Pathos and Imagination.



*S. Selvaratnam*
*Thaiyiddy*

## சிரிப்பு வருகிறது!

1. **நோயாளி:** டாக்டர்! எனக்கு ஆப்ரேசன் பண்ணினால் என்னால் தீபாவளி கொண்டாடேலாது.
**டாக்டர்:** ஆப்ரேசன் பண்ணலைன்னா நான் தீபாவளி கொண்டாடேலாது கண்ணா!
2. **அப்பா:** மகன்! முதல்ல சந்திரனில்ல கால் வைத்தது ஒரு வெளிநாட்டுக்காரன் "நீல் ஆம்ஸ்ரோங்" என்கிறார்கள். ஆனால் நான்தான் சந்திரனில் முதலில் கால் வைத்தது என்று சொன்னால் நம்பமாட்டினம்.
3. **மகன்:** என்னண்டு அப்பா வைச்சீங்க!
**அப்பா:** உந்த வெளிநாட்டுக்காரர் போக முதலே பக்கத்து வீட்டு சந்திரனோட சண்டை பிடிக்கும் போது முதல்ல நான்தான் கால் வைச்சேன்.
4. **அம்மா:** இங்க பார்! இது வெளிநாட்டுக் கல்யாணம்.
**மகன்:** என்னண்டு கண்டுபிடிச்சீங்க அம்மா?
**அம்மா:** நாங்க கல்யாண வீட்டில அம்மி மேலதான் கால் மிதிச்சோம். அங்கபாரு. அவங்க கிரைண்டர் மேலே கால் வைக்கினம்.



ஜோ.றொனிசியா
10
யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் தகவல் மணிகள்

### பொது அறிவு



1. உலகில் கண்தானம் செய்யும் நாடுகளில் முதலிடம் பெற்ற நாடு எது? இலங்கை
2. நீரங்களை உலராத விலங்கு எது? நாய்
3. அழிந்துபோன, உரோமஞ்செறிந்த, பெரிய, யானை இனம் யாது? மமோத்து
4. மெழுகுவர்த்தி தயாரிக்க பயன்படும் பொருள் எது? பரஃபின்
5. முதன் முதலில் ஏவப்பட்ட செய்மதி எது? ஸ்புட்னிக் - 1
6. உலகின் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது? ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

இ. துளசிகா
9c
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### பொதுச்சேவை நிலையங்கள் சிலவற்றின் சிங்களப் பெயர்களை அறிந்து கொள்வோம்.



| | | |
|---|---|---|
| පාසල | பாசல | பாடசாலை |
| කඩය | கடய | கடை |
| බැංකුව | (B) பங்குவ | வங்கி |
| තැපැල් කන්තෝරුව | தபல்கந்தோருவ | தபாலகம் |
| රෝහල | றோஹல | வைத்தியசாலை |
| දුම්රිය ස්ථානය | தும்ரியஸ்தானய | புகையிரதநிலையம் |
| බස් නැවතුම්පළ | B பஸ் நவதும்பல | பேருந்துநிலையம் |
| කෝවිල | கோவில | கோவில் |
| පොළ | பொல | சந்தை |
| පන්සල | பன்சல | விகாரை |
| පල්ලිය | பள்ளிய | பள்ளிவாசல் |
| දේවාලය | தேவாலய | தேவாலயம் |
| වරාය | வராய | துறைமுகம் |
| ගුවන් තොටුපළ | G குவன் தொ(ட்)டுபல | விமானநிலையம் |
| උසාවිය | உசாவிய | நீதிமன்றம் |

அ.சிறிதரன் (ஆசிரியர்)
யா/ ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தியாலயம்

## பொது அறிவு



1. ஆரோக்கியமான மனிதனின் இதயத்துடிப்பு நிமிடத்திற்கு எத்தனை முறை நிகழும்? 72 முறை
2. நைதரசன் அதிகளவில் அடங்கியுள்ள உரம் எது? யூரியா
3. சிறுவர்களுக்குக் காணப்படும் பாற்பற்கள் எத்தனை? 20
4. தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் யார்? அலெக்சாந்தர் கிரகம் பெல்
5. பறக்கும் பாலூட்டி எது? வௌவால்

ந. பிரியதர்சினி
09
யா/ குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்

## உங்களுக்குத் தெரியுமா?



1 ) மிகச் சிறிய பூச்சி இனம் இராமபாணம்.
2 ) ஆண் கொசு மனிதரைக் கடிப்பதில்லை.
3 ) பல்லிகள் நீர் அருந்துவது இல்லை.
4 ) சவுதி அரேபியாவில் நதிகள் இல்லை.
5 ) கிளிச் சாடிச் செடி பூச்சிகளை உணவாக உண்ணும்.
6 ) யானையும், குதிரையும் நின்று கொண்டே உறங்குவன.
7 ) நாய்களுக்கு நாக்கால் வியர்வை வெளிவரும்.
8 ) உரோமம் கொண்ட பறவை கிவி.

சி. கீர்த்திகா
தரம் 4b
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

## பொது அறிவு

1) மனிதன் இறந்த பின்னும் வளரும் உறுப்புக்கள்? தலைமுடி, நகம்
2) மனிதனின் உடல் நிறையில் எத்தனை சதவீதம் நீர் உண்டு? 65%-70%
3) மனிதக் கண்களில் விம்பம் உண்டாகும் பகுதி எது? விழித்திரை
4) பிறந்தவுடன் குழந்தைகளின் நாடித்துடிப்பு எவ்வளவு? 120-140
5) பிறப்பின்போது சிசுவின் சராசரி நீளம் எவ்வளவு? 50cm
6) நித்திரையில் உறுதி பெறும் உறுப்பு எது? மூளை



R. கிஷோக்குமார்
5c
யா/ பரியோவான் கல்லூரி

## பொது அறிவு கற்போம்

1. சிலந்திக்கு எத்தனை கண்கள் உள்ளன? 8 கண்கள்
2. அப்பிள் எங்கே கூடுதலாக உற்பத்தியாகிறது? ரஷ்யா
3. இலங்கையில் கட்டிப்பால் தொழிற்சாலை எங்குள்ளது? பொலநறுவை
4. நத்தையை சாப்பிடும் பிராணி எது? செண்பகம்
5. ஒன்பது நாள் தலையில்லாது வாழும் பிராணி எது? கரப்பான்
6. சர்வகரைப்பான் எது? நீர் (தண்ணீர்)
7. கங்காரு எந்த நாட்டின் தேசிய விலங்கு? அவுஸ்திரேலியா
8. இந்தியாவின் தேசிய பிராணி எது? மயில்
9. பறக்க முடியாத பறவை எது? கிவி
10. இலங்கையில் ஒட்டுப்பலகை தொழிற்சாலை அமைந்த இடம் எது? ஜின்தோட்டை

ம.ஜோனத்தன்
தரம் 5A
யா/ மத்தியகல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுப்போட்டி-2


மாணவர்களே! பின்வரும் வினாக்களுக்கான விடைகளை 30.06.2009க்கு முன் சுயமுகவரியுடனும், பாடசாலை முகவரியுடனும் அனுப்பிவிடுங்கள். சரியான விடைதரும் 5 அதிர்ஷ்ட சாலிகளுக்கு இலவச கண்மணி பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

**போட்டி வினாக்கள்**

1) இரட்டைக் காப்பியங்கள் எனப்படுபவை எவை?
2) தமிழில் உள்ள இலக்கண நூல்களில் காலத்தால் முந்தியது எது?
3) சீறாப் புராணத்தை இயற்றியவர் யார்?
4) சிலப்பதிகாரத்தின் 3பெரும் பிரிவுகள் எவை?
5) ஈழத்தின் முதலாவது தமிழ் நாவலை எழுதியவர் யார்?
6) தமிழ்ச் சிறுகதையின் தந்தை எனப்படுபவர் யார்?
7) கண்ண தாசனின் இயற் பெயர் என்ன?
8) திருக்குறளின் பொருட் பால் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?
9) "வெள்ளிப் பாதசரம்" எனும் சிறுகதைத் தொகுதியை எழுதியவர் யார்?
10) ஈழத்தின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை எது?

## காட்சியும் கற்பனையும்-2

மாணவர்களே! தரப்பட்ட காட்சியைக் கவனியுங்கள் உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுங்கள். 5 வரிகளுக்கு குறையாமலும் 8 வரிகளுக்கு மேற்படாமலும் கவிதைகளை எழுதி, சுயமுகவரி, பாடசாலை முகவரியுடன் அனுப்புங்கள்- 31.06.2009 இற்கு முன்பாக....!



## குறுக் கெழுத்துப் போட்டி- 02

மாணவர்களே! இதற்கான விடைகளை 30.06.2009 க்கு முன் கிடைக்கக் கூடிய வகையில், பெயர், தரம், பாடசாலை முகவரி, சுயமுகவரியுடன் அனுப்புங்கள். வெற்றியாளருக்கு இலவச பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 4 தி | 6 | ர் |
| | | 5 து | | | பு |
| | | ▨ | | | 9 சி |
| 3 சு | | ங் | | | |
| | 7 ச | | | | |
| | 8 கி | | | | |


### மேலிருந்து கீழ்

1. பஞ்ச பாண்டவர்களில் ஒருவன்.
2. அவுஸ்திரேலியாவில் மட்டும் உள்ள மிருகம்
4. கொடிய மீன்வகை ஒன்று
6. காங்கேசன் துறைக்கு வழங்கப்பட்ட பழைய பெயர்
7. தோழி என்றும் பொருள் தரும்.
9. கண்ணகியின் காலில் இருந்தது

### இடமிருந்து வலம்

1. சைவத்தின் தொன்மையான முனிவர்
3. நிலத்தின் கீழ் அமைந்த இரகசிய வழி
5. துறவிக்கு வேந்தன் இதைப் போன்றவன்
7. உழைப்புக்குப் பதிலாகக் கிடைப்பது
8. சிறிய பாத்திரம்

### சிந்தனைத் துளிகள்




* நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை.
* வறுமையிலும் நிறைவு காண்பவனே மிகப் பெரிய பணக்காரன்.
* கால்கள் தடுமாறலாம். ஆனால் நாக்கு மட்டும் ஒரு போதும் தடுமாறக் கூடாது
* ஒருவர் அடிக்கடி எதனை வெறுப்பதாக கூறுகிறாரோ அதனை அவர் அதிகமாக நேசிப்பதாக அர்த்தம்.
* கொள்கை அற்றவனிடம் இருந்து அன்பை எதிர்பார்ப்பது மூடத்தன மாகும்
* நல்லவன் என்று பெயரெடுக்க அதிக காலம் எடுக்கும். கெட்டவன் என்று சில நொடிகளில் பெயரெடுக்கலாம்.
* மற்றவர் குறைகளை மன்னிக்கத் தெரியாதவர்களைத் தெய்வமும் மன்னிக்காது, கை விட்டு விடும்.

யோ. துர்க்காயினி
தரம்– 6A
யா/ இராமநாதன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படங்களுக்கு வர்ணம் தீட்டுவோமா?





ஜெ. ஸயந்தன்
தரம்-6A
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்






பா. பாருகன்
தரம்-09
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை





பா.விசாகன்
8B
யா/ செங்குந்தா- இந்துக்கல்லூரி



த. லாவண்யா
5A
யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org